1979 பிப்ரவரி 14]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, போளூர் வட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதியில் உள்ள ஜம்னாமத்தூர் என்ற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் திறப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்று அங்கு வந்த அரிசன நலத் துறை அமைச்சர் அறிவித்தார்கள். அது பற்றிய தகவல் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துக் தரமுடியும்.

சின்னசேலம் ஆட்டுப்பண்ணை.

*வினா எண். 60—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சின்ன சேலத்தில் உள்ள ஆட்டுப்பண்ணையை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, சின்னசேலம ஆட்டுப்பண்ணை மிகப்பெரிய பண்ணை. கிட்ட தட்ட 2000 ஏக்கர் நிலப்பரப்பில் அது அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த ஆட்டுப்பண்ணையை அபிவிருத்தி செய்ய உலக வங்கியிடமிருந்து உதவி பெற்றாவது செய்ய அரசு முன்வருமா? 1967-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட அந்த பண்ணை, தென்னாற்காடு மாவட்டத்தில் மிகப்பெரிய பண்ணையாக விரிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, உலக வங்கியின் நிதியுதவி பெற்று திட்டங்களைச் செயல் படுத்த, பெரும் திட்டங்களை அனுப்புமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க கால்நடை பராமரிப்பினைப் பொறுத்தவரையில் ரூ. 47 கோடி மொத்தச் செலவில் ஆடு வளர்ப்பிற்காக திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ் வாடு வளர்ப்புத் திட்டத்திற்குத் தேவைப்படும் 33,000 ஆடு களைப் பெறும் பொருட்டு கலப்பின ஆட்டுப்பண்ணை ஒன்றை சின்னசேலத்திலுள்ள ஆட்டுப்பண்ணையில் நிறுவ திட்ட அறிக் கையில் உத்தேசிக்கப்பட்டுள்ளது, அவ்வாறு நிறுவப்பட்டால் சின்னசேலம் ஆட்டுப்பண்ணையில் தற்போதுள்ள வசதிகள் அபி விருத்தி செய்யப்பட்டு பண்ணை விரிவாக்கப்படும்,

[1979 பிப்ரவரி 14

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சின்னசேலம் ஆட்டுப்பண்ணையின் மொத்த பரப்பளவு எவ்வளவு? அங்கே உள்ள ஆடுகளின் மொத்த எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, சின்னசேலம் ஆட்டுப்பண்ணையின் மொத்த பரப்பளவு 1,866.50 ஏக்கர். அந்தப் பண்ணையில் மேச்சேரி செம்மறி ஆடுகள் 1,673-ம், ஜம்னுபாரி வெள்ளாடுகள் 19-ம் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அது அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. ஒழுங்குப் பிரச்னைகள்.

(அ) முதலமைச்சர் துறைகள் குறித்த வினாக்கள் எடுத்துக் கொள்ளப் பெறுதல்.

* திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஏறத்தாழ இரண்டாண்டு காலமாகவே ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் தங்களுடைய முக்கியமான கவனத்திற்கு ஒரு பிரச்னையை நான் கொண்டு வருகிறேன். தாங்களும் அதை கவனிப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனல் என்ன காரணமோ, தாங்கள் கவனிக்கிறேன் என்று சொல்லியும் கூட அது இந்த அவையை அலட்சியப்படுத்துகிற அளவிற்கு நடந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று இருக்கும் துறைகள் : பொது நிர்வாகத்துறை, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, பாஸ்போர்ட், மதுவிலக்கு, லஞ்ச ஒழிப்பு, பெருந்தொழில்கள் உள்ளிட்ட தொழில்துறை, சுரங்கங்கள், கனிவளம்—இவ்வளவு துறைகள் வைத்துக்கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு பல கேள்விகளை சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பியிருக்கின்றனர். அதற்கு அவர்கள் பதில் அளிக்கவேண்டும். ஆனல் அவர் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் ஓரிரு கேள்விகளுக்குத் தான் இதுவரையில் பதில் அளித்து இருக்கிறார். வேறு எந்தக் கேள்விக்கும் பதில் அளிக்கவில்லை. என்ன காரணம், இந்த அவையை ஏன் இப்படி அலட்சியப்படுத்த வேண்டும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உணர்வுகளை நான் அறிகிறேன். முதலமைச்சர் சம்பந்தப்பட்ட கேள்விகள் வருகின்றன. அதற்கான பதில்களும் வந்துகொண்